# இறையியல் கோலங்கள்

வடிவம்: 13 மார்ச் 2000 வண்ணம்: 01

## ஜூபிலி



## 2000

உயிர்ப்பில் உரிமை வாழ்வு வழங்க...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையியல் கோலங்கள்

காலாண்டு வெளியீடு

# IRAI — IYAL KOLANGAL

Tamil Theological Quarterly


வடிவம் : 13

வண்ணம் : 01

பங்குனி : 2000



ST. FRANCIS XAVIER'S SEMINARY
LIBRARY
★ COLOMBOGAM ★



புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி

கொழும்புத்துறை

யாழ்ப்பாணம்

இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் :

அருட்திரு ஜே. நீக்கிலஸ்

துணை ஆசிரியர்கள் :

அருட்திரு ச. வி. ப. மங்களராஜா
அருட்திரு. பி. யே. ஜெபரெட்ணம்
அருட்சகோ. செ. எ. றொஷான்
அருட்சகோ. சி. லியோ ஆம்ஸ்ரோங்
அருட்சகோ தே. ரவிராஜ்
அருட்சகோ. செ. அன்ரன்

விநியோகம் :

அருட்சகோ. ம. பத்திநாதர்
அருட்சகோ. இ. கி. ம. அஞ்சலோ

வெளியீடு :

புனித பிரான்சிஸ்கு சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்,
இலங்கை.
( தனிப்பட்ட விநியோகத்திற்கு மட்டும் )

EDITOR :

*REV. FR. J. NICHOLAS*

SUB EDITORS :

*REV. FR. S. V. B. MANGALARAJAH*
*REV. FR. P. J. JEBARATNAM*
*BRO. S. A. ROSHAN*
*BRO. S. LEO ARMSTRONG*
*BRO T. RAVIRAJAH*
*BRO. S. ANTON*

DISTRIBUTION :

*BRO. M. PATHINATHAR*
*BRO. R. C. M. ANGELO*

PUBLICATION :

*ST. FRANCIS XAVIER'S SEMINARY*
*COLUMBUTHURAI,*
*JAFFNA,*
*SRI LANKA.*
*( For private circulation only )*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| ❀ | உட்புகுமுன் | 04 |
| 01. | கிறிஸ்துவின் உயிர்ப்பு<br>எம் உள்ளங்களின் உயிர்ப்பு<br>திரு. த. இ. ரங்கநாயகம் | 05 |
| 02. | புதுயுகமும் நம்பிக்கையும்<br>அருட்சகோ. செ. றெ. இறஞ்சிதராஜ் | 10 |
| 03. | இறைநம்பிக்கையில்தான் விடுதலையின்<br>ஆரோக்கியமான பயணங்கள் தொடரும்<br>திரு. எவ். சவுந்தரம் | 16 |
| 04. | கிறிஸ்துவின் உயிர்ப்பும்<br>கிறிஸ்தவர்களும்<br>அருட்சகோ. சா. ஜஸ்ரின் | 22 |
| 05. | இன்றைய பாலைவனத்தின் எதிரொலி<br>அருட்சகோ. நி. றொ. வசந்தசிலன் | 27 |
| 06. | Synopsis | 34 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உட்புகுமுன் (Editorial)

# கிறிஸ்துவின் உயிர்ப்பு - எம் விசுவாசத்தின் ஊற்று

''நாங்கள் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பற்றி பறைசாற்றுகிறோம். அச்சிலுவை யூதருக்கு தடைக் கல்லாகவும் பிற இனத்தாருக்கு மடமையாயும் இருக்கிறது'' (1 கொரி 1:23).

சிலுவை ஒரு மறைபொருளாய் உள்ளது. சிலுவையின் பொருளை உணர்ந்து ஏற்றுக் கொள்ள மனித வல்லமை யால் முடியாது. சிலுவை தனியாகப் பொருள் பெறமுடி யாது. சிலுவைக்குப் பின்னால் வரும் உயிர்ப்புத்தான் அனைத்திற்கும் அர்த்தம் கொடுக்க முடியும். உயிர்ப்பின் உண்மைதான் எமது விசுவாசத்தின் ஊற்றாய் விளங்குகி றது. எனவே விசுவாசம்தான் சிலுவைக்குப் பொருள் கொடுப்பதோடு அதனை ஏற்கும் வல்லமையையும் அளிக் கின்றது.

உலகின் பல்வேறு பாகங்களிலும் இன்று நம்பிக்கையற்ற தன்மையும், விரக்தியும், வெறுப்பும் நிறைந்து காணப்படு கின்றன. துன்பதுயரங்களும், அடிமைத் தனங்களும் வளர்ந்து கொண்டு போகின்றன. ஆன்மீக இருள் மனித வாழ்வை கவ்விப் பிடித்துள்ளது. இவ்வாறான நிலைகளில் கிறிஸ்துவின் உயிர்ப்பு நம்பிக்கையின் ஒளியாகப் பிரகாசிக் கின்றது.

2000ம் மாபெரும் யூபிலி ஆண்டிலே கிறிஸ்துவின் உயிர்ப்பு விழா தனிச் சிறப்பு மிக்கது. ஏனெனில் கிறிஸ்து அடிமை விலங்கொடித்து, பாவஇருள் அகற்றி, அனைவருக் கும் உரிமை வாழ்வு வழங்கியது தன் உயிர்ப்பின் வல்லமை யால். உயிர்த்த இயேசுவின் அருளாற்றல் எல்லா உள்ளங் களிலும் நிறைந்து விளங்க நாம் அவரின் நற்செய்தியைப் பறைசாற்றுவோம்.

அருள் திரு ஜே. நீக்கிலஸ்
பிரதம ஆசிரியர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்துவின் உயிர்ப்பு
# எம் உள்ளங்களின் உயிர்ப்பு

**திரு. த. இ. றங்கநாயகம்**
( ஆசிரியர் – கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி )

முழுமனிதனும் அவனது தற்போதைய நிலையில் சாவின் ஆதிக்கத்திற்கு உட்பட்டவனாகிறான். இறக்கும்போது அவனது ஆன்மா 'சேயோல்' என்னும் பாதாளத்தில் சிறைப்படும். உடலோ மண்ணில் அழிவுறும். ஆனால் இந்நிலை என்றும் நீடிப்பதில்லை. இறைவனின் அருளால் மீண்டும் உயிர் பெற்று எழுவான் என பழைய ஏற்பாட்டுக் காலத்தில் நிலவிய இவ் எண்ணம் புதிய ஏற்பாட்டுக் காலத்திலும் அதற்குப் பின்னும் கிறீஸ்தவர்களின் விசுவாசத்திற்கும் நம்பிக்கைக்கும் மையமாக மாறுகின்றது. ஏனெனில் ''மரித்தோரிடமிருந்து எழுந்த முதற் கனியாக'' கிறீஸ்து காணப்படுகின்றார்.



பழைய ஏற்பாட்டில் வாழ்வுக்கும், சாவுக்கும் கடவுள் ஒருவரே தலைவர். உயிரைப் பறிப்பவரும் அவரே. உயிரைக் கொல்பவரும் அவரே. பாதாளத்திலின்று அவர்களைமீட்டு மீண்டும் வாழ்வளிப்பவர் யாவேதான். (சங் 41 : 3,80 ; 19). எலியாஸ், எலிசேயு போன்றவர்கள் செய்த புதுமைகள் இறந்தவரை யாவே உயிர்ப்பிக்க வல்லவர் என்பதை தெளிவாக காட்டுகின்றது.

இயேசு நமக்கு வாழ்வின் மீதும் சாவின் மீதும் இறைவன் அதிகாரம் கொடுத்துள்ளார் என்பதையும் உண்மையான உயிர்ப்பை ஆரம்பித்து வைப்பவர் தாமே என்பதையும் நன்கு அறிந்திருந்தார். மேலும் தந்தையிடம் இருந்து தான்பெற்ற ஆற்றலுக்கு சான்றாக அவர் இறந்தோர் பலருக்கு உயிர் அளிக்கின்றார். யாயீரின் மகளை உயிர்ப்பித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தல் (மாற் 5 : 21 – 42), நயீன் ஊர் விதவையின் மகனை உயிர்ப்பித்தல் (லூக். 7 ; 11 -17) லாசரை உயிர்பித்தல் (யோவா 11 அதி). எனினும் அவர் இவற்றின் ஊடாக தம் சொந்த உயிர்ப்பையையும் இலைமறையாக எடுத்துரைத்துள்ளதை உணர முடிகின்றது. மேலும் தன்சீடர்களுக்கு தான் மூன்றாம் நாளில் உயிர்த்தெழுவேன் எனவும் கூறிநிற்கின்றார். இந்த வகையி லே தான் செய்தவை, போதித்தவை உண்மையானவை என எடுத்துரைக்கும் வகையில் அவர் இறந்து மூன்றாம் நாள் பாதாளத்தில் நின்று உயிர்த்தெழுந்தார்.

## அப்போஸ்தலர்களின் சாட்சியங்கள்

"கிறிஸ்து உயிர்த்தெழவில்லை என்றால் எங்கள் தூதுரை பொருளற்றதே, உங்கள் விசுவாசமும்பொருளற்றதே" (1 கொரி 15; 14). உயிர்த்த கிறிஸ்துவை தன் வாழ்வில் கண்டு அனுபவித்து அவருக்கே தன்னை முழுமையாக அர்ப்பணித்து உயிர்த்த கிறிஸ்துவின் போதனைகளையும் பணிகளையும் எடுத்துரைத்த புனித பவுலின் முக்கியமான இறையியல் கூற்றாக இது காணப்படுகின்றது. அவ்வாறே உயிர்த்த கிறிஸ்துவின் ஒளியிலேயே கிறிஸ்தவ சமயம் கட்டி எழுப்பப்பட்டுள்ளது. கிறிஸ்தவத்தின் மையமாக அச்சாணியாக உயிர்த்த கிறிஸ்துவே விளங்குகின்றார் என்பதை அவரின் அன்புச் சீடனாகிய புனித யோவான் எடுத்துரைக்கின்றார். "மக்களை விசுவாசத்திற்கு

> "கிறிஸ்து உயிர்த்தெழவில்லை என்றால் எங்கள் தூதுரைபொருளற்றதே, உங்கள் விசுவாசமும் பொருளற்றதே. (1 கொரி 15 : 14

அழைத்த இவரே விசுவாசத்தின் பிரமாணப்பதமாக, விசுவாசப் பொருளடக்கமாக மாறினார் (யோவா 6 ; 69) கிறிஸ்துவால் திருச்சபையின் தலைவராக ஏற்படுத்தப்பட்டு ஆரம்பத் திருச்சபையை வழிநடத்திய அவருடைய இன்னுமொரு அன்புச்சீடர் பேதுரு "கடவுள் இறந்த யேசுவை உயிர்த்தெழச் செய்தார் இதற்கு நாங்கள் அனைவரும் சாட்சிகள்" (தி. தூ. ப. 2 : 32) என எடுத்துரைக்கின்றார். எனவே கிறிஸ்துவின் உயிர்ப்புக்கு அவருடைய சீடர்கள் உறுதியான சாட்சியங்களாக இருந்துள்ளார்கள் என்பதை நாம் அறிய முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆதிக்கிறிஸ்தவர்களின் சாட்சிய வாழ்வு

கிறிஸ்துவின் உயிர்ப்புக்கு ஆதிக் கிறிஸ்தவர்களின் சட்சியவாழ்வு இன்னுமொரு எடுத்துக் காட்டாகும். யூதர்களைப் பொறுத்த வரையில் பழைய ஏற்பாட்டில் எடுத்துரைக்கப்படுகின்ற 'யாவே' யை மட்டுமே தனி ஏக கடவுளாக ஏற்று வழிபட்டு வந்தவர்களாவர், அவ்வாறாக யாவேக்குக் கொடுக்கப்பட்ட கடவுள் என்ற உயர்ந்த நிலையை ஆதிக்கிறிஸ்தவர்கள் எந்த வித தயக்கமும் இன்றி உயிர்த்த இயேசுவுக்கு கொடுத்து அவரை ஆண்டவராக ஏற்று அவருக்கு ஆராதனை செலுத்தி வந்துள்ளனர். இதற்கு அடிப்படைக் காரணம் கிறிஸ்துவின் உயிர்ப்பும் அந்த உண்மையை எந்தவித சந்தேகத்திற்கும் இடமில்லாத வகையில் அவர்கள் ஏற்றுக் கொண்டதுமே ஆகும்.

## கிறிஸ்துவின் உயிர்ப்பு உண்மையானதா?

கிறிஸ்தவ சமயத்தின் அடிப்படை நம்பிக்கை கிறிஸ்துவின் உயிர்ப்பு. கிறிஸ்து இவ்வுலகில் வாழ்ந்தபோது எதிர்க்கப்படும் அறிகுறியாக இருந்ததோடு அவருடைய சொந்த மக்களாலேயே சிலுவைச் சாவுக்கு உட்படுத்தப்பட்டார் என்பது எல்லோரும் ஏற்றுக் கொண்ட, அறிந்து கொண்ட ஓர் உண்மையாகும், ஆனால் அவர் மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார் என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்ள வில்லை. அவரது உயிர்ப்பை முதலிலே எதிர்த்தவர்கள் யூதக் குருக்களே. பின்னர் இவர்கள் கொண்டிருந்த கருத்தை ரெய் மாரூஸ் என்பவரும் அவருடைய தோழர்களும் பின்பற்றி கிறிஸ்துவின் உயிர்ப்பை எதித்தார்கள். கிறிஸ்து இறந்தவுடன் அவருடைய சீடர்கள் அவருடைய உடலை திருடி மறைத்து விட்டு கிறிஸ்து உயிர்த்து விட்டார் என பொய்ச்சாட்சி சொன்னதாக எடுத்துரைத்தனர். ஆனாலும் அப்போஸ்தலர்களின் உறுதியான சாட்சியங்களும் ஆதிக்கிறிஸ்தவர்களின் சாட்சிய வாழ்க்கை முறைகளும் இவர்களது கூற்றுக்களை அர்த்தமற்றதாக பொருத்தமற்றதாக செய்து விட்டன. கிறிஸ்துவின் உயிர்ப்பை நாம் நற்செய்திகளின் பின்னணியில் விளங்கிக் கொள்ள முடியும்.

## கிறிஸ்துவின் உயிர்ப்புக்கு நற்செய்திகளில் சான்று

கிறிஸ்துவின் உயிர்ப்பு நிகழ்வானது புதிய ஏற்பாட்டின் எந்த ஒரு நூல்களிலுமே குறிப்பிடப்படவில்லை, மாறாக வெற்றுக் கல்லறையைப் பற்றியும், உயிர்த்த கிறிஸ்துவின் காட்சிகளுமே குறிப்பிடப் பட்டுள்ளன. குறிப்பாக நான்கு நற்செய்தியாளர்களும் உயிர்த்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறீஸ்துவின் ஒளியிலேயே தம் நற்செய்திகளை எழுதியுள்ளனர். ஒத்தமை நற்செய்திகளில் இயேசு தாமே தமது பாடுகள் மரணம் உயிர்ப்பு பற்றி பலமுறை முன் அறிவித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளன (மத் 16:21 மாற் 8:3, லூக் 9:22). உயிர்த்த கிறீஸ்து தமது காயங்களை அப்போஸ்தலர்களுக்கு காட்டியதாக லூக் 24:39 இலும் யோவா 20:20,25 இலும் குறிப்பிடப்பட்டுள்ளது. எம்மாவுஸ் சென்ற சீடர்கள் அவர் அப்பத்தை பிட்கையில் கிறீஸ்துவே என உணர்ந்து கொண்டதாக லூக் 24:30 இல் கூறப்பட்டுள்ளது. கிறீஸ்துவின் உயிர்ப்பு நற்செய்தியை தெரிவித்த வானதூதர் பெண்களிடம் "சிலுவையில் அறையப்பட்ட நசரேத்தூர் இயேசுவை தேடுகின்றீர்கள்; அவர் உயிர்த்து விட்டார்,..." (மாற் 16:6) என அறிவித்தனர். மரியமதலேன் உயிர்த்த கிறீஸ்துவை இனங் கண்டு கொண்டதாக யோவா 20:16 இல் கூறப்படுகின்றது. இவையெல்லாம் கிறீஸ்து உண்மையாகவே தான் கூறியவாறு மூன்றாம் நாள் மாட்சிமையோடு 'உயிர்த்தெழுந்தார்' என்பதற்கு ஆதாரமான காட்சிகளாகும்.

## எம் உள்ளங்களில் உயிர்ப்பு

கிறீஸ்துவின் உயிர்த்தெழுதலை நமது விசுவாசமாக மனப்பூர்வமாக நாம் அறிக்கையிடுகின்ற போது அவரது புதிய வாழ்விலே நாமும் பங்கு கொள்ளுகின்றோம். வரலாற்று மனிதனாக இருந்த போது அவர் போதித்த வாழ்ந்து காட்டிய இலட்சியங்களை அவரது உயிர்ப்பின் பின்னணியில் ஏற்று வாழ்வதன் மூலமே நாமும் உயிர்ப்பு பெற்ற மனிதர்களாக நிறைவான வாழ்வை பெறமுடியும்.

> கிறீஸ்துவின் உயிர்த்தெழுதலை நமது விசுவாசமாக மனப்பூர்வமாக நாம் அறிக்கையிடுகின்ற போது அவரது புதிய வாழ்விலே நாமும் பங்கு கொள்ளுகின்றோம்.

நாம் போரும், பூசலும், துன்பமும், துயரமும், பயங்கரமும், பீதியும் நிறைந்த சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இப்பயங்கர நிலைக்கு காரணம் ஆட்சியாளர்களும் அவர்களின் அரசியல் நிலைப்பாடுகளுமே என எண்ணி அவற்றில் மாற்றங்களை எதிர்பார்த்திருக்கின்றோம். ஆனால் உயிர்த்த கிறீஸ்துவை எமது வாழ்வின் மையமாக கருதிக் கொண்ட நாம் அவரின் பாதையில் நடக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைக்கின்றோமா? அந்த ஒளியிலே எம் வாழ்வில் மாற்றங்களை ஏற்படுத்தி நிறைவான வாழ்வை வாழ முனைகின்றோமா என்பது கேள்விக்குறியே.

உயிர்த்த கிறீஸ்து தன்னுடைய சீடர்களுக்கு தோன்றிய போது "உங்களுக்கு சமாதானம்" என்றார். இதன் அர்த்தத்தை தெளிவாக நாம் புரிந்து கொண்டால் நாட்டிலே சமாதானம் இல்லையென கூறுவதை விட எனது வீட்டில் உள்ளவர்களோடும் அயலவர்களோடும் சமாதானமாக வாழ முற்படுவேன்.

இறைவனுக்காக தம்மை முழுமையாக அர்ப்பணித்து துறவு வாழ்வு வாழுகின்றவர்கள் உயிர்த்த கிறீஸ்துவில் ஆழமான அனுபவங்களை பெற்று கொண்டவர்கள். அவர்களுடைய வாழ்வு பலி வாழ்வாக அமையவேண்டும். இறை அன்புக்காக அனைத்தையும் துறந்து உயிர்த்த கிறீஸ்துவின் உண்மைச் சாட்சிகளாக மற்றவர்களுக்காக தன்னையே அளித்து "நானே நல்ல வாயில்" என்ற கூற்றுக்கு ஏற்ப வாழ வேண்டும்.

> திருநிலையினரும், பொதுநிலையினரும் உயிர்த்த கிறீஸ்துவின் அர்ப்பண வாழ்வை பின்பற்றி அவரின் உண்மை சாட்சிகளாக வாழுகின்றபோதுதான் கிறிஸ்துவின் உயிர்ப்பு அர்த்தம் பெறும்.

இவ்விதமாக திரு நிலையினரும், பொது நிலையினரும் உயிர்த்த கிறீஸ்துவின் அர்ப்பண வாழ்வை பின்பற்றி உயிர்த்த கிறீஸ்துவின் அனுபவங்களை சிறப்பான வகையிலே பெற்றுக் கொண்டு அவரின் உண்மை சாட்சிகளாக வாழுகின்ற போது பிறந்திருக்கும் புத்தாயிரம் ஆண்டில் இறை தந்தையின் சித்தத்திற்கு ஏற்ப புதியதொரு சமுதாயத்தை கட்டி எழுப்புவதோடு இறையரசின் உரிமையாளர்களாகவும் எம்மை ஆக்கிக் கொள்ள முடியும். அப்போதுதான் கிறீஸ்துவின் உயிர்ப்பு அர்த்தம் பெறும்.

## உசாத் துணை நூல்கள்


i) விவிலியக் களஞ்சியம் ii

ii) நவீன இறையியலின் அடிப்படைகள்

iii) இறையியல் கோலங்கள், வடிவம் 5, மார்ச் 1989, வண்ணம் 3

iv) இறையியல் கோலங்கள், வடிவம் 9, வண்ணம் 1, பங்குனி 1993




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுயுகமும் \ நம்பிக்கையும்

அருட்சகோ. செ. றெ. இரஞ்சிதராஜ்
2ம் வருட இறையியல்



புதுயுகத்துள் கால் பதித்து நிற்கும் நாம் சில யதார்த்த நிலையை சிந்திக்கக் கடமைப் பட்டுள்ளோம். மனிதனின் எல்லாத் துறைகளி லுமான அபார வளர்ச்சி புதுயுகத்தில் பெரும் மாற்றங்களை உருவாக்குவது நிஜம். எத்த னையோ பல சாதக பாதக விளைவுகளை சுமந்ததாக எங்கள் எதிர்காலம் விரிந்திருக்கின் றது, கல்லைத்தட்டி தீ எழுப்பிய மனிதன் கண நிமிடத்தில் உலகையே தீக்குளிக்க வல்லவனாகி விட்டான். இப்படியாக மனித சக்தி வளர்ந்து அவன் தன் மார்பு தட்டும் வேளையில் திருச்சபை "மாபெரும் யூபிலி 2000" என்ற அழைப்பை விடுக்கின்றது. இந்த யுகம் ஒற்றுமையின், சமாதானத்தின் விசுவாசத்தின் யுகமாக உருவாக வேண்டும் என்று இவ்வருடத்தை நற்கருணையின் ஆண்டாக திருச்சபை பிரகடனப்படுத்தியுள்ளது. ஆனால் இந்த உலகப் போக்குள் மூழ்கியுள்ள, அதன் சுழற்சியில் அகப்பட்டுள்ள மனிதத்துள் இந்த இறை நம்பிக்கையை எப்படிப் புகுத்த முடியும்? அந்த விசுவாசத்தை உயிரூட்டமுள்ளதாக எப்படி மாற்றமுடியும்? இந்த யதார்த்த நிலையை புதுயுகத்தின் முதல் ஆண்டிலேயே சற்று நின்று சிந்திக்கும்போது இப்பணியை செவ்வனே செய்ய விலைமதிக்கப்பட முடியாத பெரும் தியாகங்கள் புதுயுகத்தில் செய்யப்படவேண்டும் என்பது கண்கூடு. ஏனெனில் இன்றைய உலகின் போக்கும் கிறிஸ்துவின் எண்ணங்களும் நூற்றுக்கு நூறுவீதம் எதிரானவை. "உலகம் உங்களை வெறுகின்றதென்றால் உங்களை வெறுக்கும் முன்னே அது என்னை வெறுத்தது என்று தெரிந்து கொள்ளுங்கள்" (அரு 15/18). இந்த ஒரு வசனமே அதை முழுதும் உறுதிப்படுத்துகின்றது.. இந்த நிலையில் நின்றுகொண்டு, கடந்த யுகங்களின் வரலாற்று நிகழ்வுகளையும் நிகழ்கால யதார்த்தங்களையும் சிந்தையிலிருத்தி புதுயுகத்தில் இறை நம்பிக்கை பற்றி சற்று நோக்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரத்தமும் நம்பிக்கையும்

இயேசு தன்னுடைய இரத்தத்தினால் விசுவாசத்தை வித்தாக்கினார். இந்த விசுவாச வித்துக்குத் தேவையான சூரிய ஒளி, வளம் நிறைந்த நிலம், நீர், இவையெல்லாம் வேறெதுவுமல்ல அப்போஸ்தலர்களினதும் விசுவாசிகளினதும் இரத்தமே. இயேசுவின் இரத்தத்தினால் கருவாகி பலரது இரத்தத்தினால் பிரசவிக்கப்பட்டதே இந்த விசுவாசம். இப்படி அந்த விசுவாசம் அவர்களின் இரத்தத்தினால் காக்கப்படாது விடப்பட்டிருப்பின் எங்களுக்கு அது கிடைக்காமல் போயிருக்கும். உயிர்த்த இயேசுவின் உறுதிதரும் ஆவியும் விசுவாசத்தில் அவர்கள் வைத்த பற்றும் அவர்களை தங்கள் உயிரை இழக்கும் அளவிற்கு உயர்த்தியது. இந்த விசுவாசத்திற்கான தற்கொடை திருச்சபைக்கு சுதந்திரமாக இயங்கும் அரசியல் உரிமை கிடைக்குமட்டும் தொடர்ந்தது. மிலான் (312) சாசனத்துடன் இந்த இரத்தம் படிந்த வரலாறு சற்று மாற்றம் பெற்றது.

## பேதகங்களும் நம்பிக்கையும்

இரத்தம் சிந்தும் ஆயுதப்போர்கள் சில வேளைகளில் பேச்சு வார்த்தைகள் மூலம் முடிவுக்கு கொண்டுவரப்படலாம். ஆனால் கருத்து மோதல்கள் மனித அறிவு இருக்கும்வரை தொடர்ந்துகொண்டே இருக்கும். உண்மையான கருத்துக்கள் கண்டுபிடிக்கப்பட வேண்டும், வளர்க்கப்பட வேண்டும். இந்த உண்மையை நோக்கிய தேடல் பிழையான கருத்தில் ஒன்றித்தமையால் உருவானவைதான் பேதங்கள்.

> இயேசுவின் இரத்தத்தினால் கருவாகி பலரது இரத்தத்தினால் பிரசவிக்கப்பட்டதே இந்த விசுவாசம்.

திருச்சபை வரலாற்றில் எழுந்த விசுவாச வாதைகளுள் இவை மிகக் கொடூரமானவை. விசுவாசத்தின் ஆணிவேரையே உலுப்புவதாக அமைந்தன. திருச்சபையின் படிப்பினைகளும் சங்கங்களும் இந்த தப்பறைகளுக்கு எதிரான, ஆனால் சரியான படிப்பினைகளைத் தந்தன. இதன் விளைவாக உருவானதே எங்கள் விசுவாச உச்சாரணம். திருச்சபையின் வழுவாத்தன்மை கொண்ட போதனை எமது நம்பிக்கையை வாழவைக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடவுள் மறுப்புக்கொள்கைகளும் நம்பிக்கையும்

இவை பேதகங்கள் போன்றதல்ல. ஆனால் விசுவாசத்தில் தாக்கத்தை ஏற்படுத்த வல்லது. விசுவாசம் என்பது கண்காணாதவை பற்றிய மனம் தளராத நிலை, அண்மைக்காலங்களில் எழுகின்ற இந்த நாத்திகக் கொள்கைகள் கண் — காணாதவை மேல் கொள்ளும் மனம் தளராத நிலையை குலைப்பதாக அமைகின்றன. மத்திய காலத்து மெய்யியல் அறிஞர்கள் இறை இருத்தலைப் பலவழிகளில் நிறுவ முனைந்தார்கள். இந்தக் காலம் கிறிஸ்தவ மெய்யியல் பெரிதும் வளர்ந்த காலம். கடவுள் மையப்படுத்தப்பட்ட காலம் (God Centric period) என அழைக்கப்படுகின்றது. இக்காலம் 4-ம் நூற்றாண்டு தொடக்கம் கிட்டத்தட்ட 14-ம் நூற்றாண்டு வரை தொடர்ந்தது. பல அரிய பெரிய மெய்யியல் இறையியல் மேதைகள் தோன்றிய காலம் இக்காலம். இது 14-ம் நூற்றாண்டின் மத்திய பகுதியில் ஏற்பட்ட மறுமலர்ச்சியுடன் முடிவுக்கு வந்தது.

அந்த மறுமலர்ச்சியுடன் உருவான காலம்தான் நவீனகாலம். இது அதிகம் மனிதனை மையப்படுத்தும் காலமாக அமைகின்றது (Anthropomo - centric Period). மத்திய காலத்தில் கடவுளை மையப்படுத்தியதால் மனிதனின் ஆற்றல்கள் திறமைகள் சிதைக்கப்பட்டு விட்டது என்று கணிக்கப்பட்டது. அதனால் நவீன காலம் மனிதனைக் கடவுளாகக் பிரதிபலிக்கத் தொடங்கியது. இதனால் பல கடவுள் மறுப்புக் கொள்கைகள் உருவாகத் தொடங்கின. மனிதன் எல்லாச் சக்திகளிலும் மேலான சக்தியானவன் என்ற கருத்து மெய்யியலாளர்கள் இடையே பெரிதும் வளர ஆரம்பித்தது. இன்று அது அதிகமதிகமாக போற்றிக் காக்கப்படுகின்றது. இதற்குப் பதிலிறுக்கும் வகையாக, வத்திக்கான் சங்க ஏடு தனது 'இன்றைய உலகில் திருச்சபை' என்னும் கொள்கைத் திரட்டில் எண் 21ல் தொடங்கி பல கருத்துக்களைக் தருகின்றது. இறை நம்பிக்கையால் மனித மாண்பு ஒரு போதும் சிதையப்போவது இல்லை.

## புதுயுகமும் நம்பிக்கையும்.

எமது விசுவாசம் பரம்பரை பரம்பரையாக பல இன்னல்கள் இடையூறுகள் ஊடாக வளர்த்தெடுக்கப்பட்டிருக்கின்றது. இந்த விசுவாசம் எமது வாழ்வாகி நாமும் அதை வாழ முயலுகின்றோம். இருந்தும் ஆதிக்கிறிஸ்தவ சமூகத்தில் காணப்பட்ட விசுவாசப் பிணைப்பு, தாகம், அதன்பால் இருந்த ஆர்வம் இன்று குறைவு என்பது மறுக்க முடியாததே. இதற்கான காரணத்தை புதுயுகத்தின் பிறப்பில் எழும் அறிவியல் வளர்ச்சியையும், எமது சாதாரண வாழ்வியல் அசைவுகளையும் கொண்டு ஆராய்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றும் ஒரு சில கலாபனைகள் நிகழத்தான் செய்கின்றன. இரத்தம் சிந்தி விசுவாசத்தைக் காக்கவேண்டிய நிலை உருவாகியிருக்கின்றது. இந்தியாவின் ஒரிசா மாநிலத்திலும் இந்தோனேசியாவிலும் நிகழ்ந்தவை இதற்கு சிறந்த எடுத்துக்காட்டுக்களாகும். இந்தியாவில் திருத்தந்தையின் வருகையினால் ஏற்பட்ட பதட்டம், நிலவிய கருத்து முரண்பாடுகள், நடத்தப்பட்ட, நடக்க இருந்த – பேரணிகள் எல்லாம் கிறிஸ்தவ விசுவாசத்தின் மேல் விழும் துப்பாக்கிச்சன்னங்களை ஒக்கும். திருத்தலங்கள் மேல் எறியப்படும் எறிகணைகளும் விமானக்குண்டுகளும் தெய்வபயம் அகன்ற நிலையை எடுத்துக்காட்டவில்லையா?

போர்கள் மனித வரலாற்றில் புதியவை அல்ல. ஆனால் கடந்த யுகத்தில் நிகழ்ந்துவிட்ட இரண்டு பெரும் உலக யுத்தங்களும் மனித மாண்பைச் சிதைக்கும் செயல்கள், பிணக்குவியல்கள் மேல் தங்கள் அரசுகளை நிறுவமுயலும் கொடிய மனித அரசுகளின் குறியீடுகள். கடந்த சில தசாப்தங்களாக இலங்கையில் நடைபெறும் இலக்கொலைகள் கூட எதைச் சொல்லுகின்றன? தெற்கிலும் வடக்கிலும் கிண்டி எடுக்கப்படும் எலும்புக்கூடுகள் மனிதத்தின் மரணத்தைச் சுட்டவில்லையா? மனிதன் இறைவனின் சாயல் கொண்டவன். ஆன்மா என்ற அறியாத ஞானச் செல்வத்தை உடையவன். அவனது உயிரை வாங்கவும் வழங்கவும் அதிகாரம் உடையவர் கடவுள் ஒருவரே என்ற உண்மை எப்பொழுது மறக்கப்பட்டது.

> உண்மையை நோக்கிய தேடல் பிழையான கருத்தில் ஒன்றித்தமையால் உருவானவைதான் பேதங்கள், திருச்சபை வரலாற்றில் எழுந்த விசுவாச வாதைகளுள் இவை மிகக் கொடூரமானவை.

திருச்சபையின் படிப்பினைகளுள் குடும்பக் கட்டுப்பாடு பற்றி பல அறிவுரைகள் உண்டு. அதில் 'கருச்சிதைப்பு' ஒரு கொலை என்பது திருச்சபையின் போதனை. ஆனால் இன்று இது சர்வசாதாரண நிகழ்வாகி விட்டது. திருச்சபையின் இந்தப் போதனைக்கு எதிராக அமெரிக்காவில் ஒருமுறை நடைபெற்ற கூட்டம் ஒன்றின் போது பெண்கள் ஒரு சுலோகத்தை கையில் தாங்கி இருந்தார்களாம் அதில் எழுதியிருந்தது, "Don't Put your Rosary into our Overy" எமது சமூகத்தில் 'வயிறு கழுவுதல்' 'ஒப்பரேசன் செய்தல்' என்ற சொற்பதங்கள் இந்தக் கருக்கொலைக்கு இடப்பட்டிருக்கின்றது. திருச்சபையின் போதனைகள் எருமை மாட்டில் விழும் மழையோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'டைம்ஸ்' (Times) சஞ்சிகை ஒன்று 'Beyond 2000' எனும் எழுத்துக் களைத் தாங்கிய அட்டைப்படத்துடன் பிரசுரமாகியிருந்தது. அப்பத்திரிகையின் கட்டுரை ஒன்றில் "பரிசோதனைக் குழாய் குழந்தைகள்" பற்றி விமர்சிக்கப்பட்டிருந்தது. பாலியல் உறவுகள் பகிடிக்காகவே இனிவரும் காலங்களில் நடைபெறும், ஏனெனில் குழந்தைகளைப் பரிசோதனைக் குழாய்கள் பிரசவிக்கும், பாலியல் உறுப்புக்களை விரும்பியவர்கள் உடலில் இருந்து சத்திர சிகிச்சை மூலம் அகற்றிவிடலாம். இவை போன்ற கருத்துக்கள் அதில் பிரசுரமாகியிருந்தன. இது புது யுகத்தில் நிகழப்போகும் பயங்கரங்களில் ஒன்று. குடும்ப அன்பு, தாய்ப் பாசம், சகோதர உறவு எல்லாம் எங்கே போகும்? தாய் தந்தை குடும்பமாக இருந்தே பல தகராறுகள். யாரோ ஒருவருடைய முட்டையும் எவரோ ஒருவருடைய விந்தும் இணைந்து வரும் குழந்தை எந்த உறவில் வளரும் — ஒற்றுமையான மனித குலம் உருவாகுமா? இவை திருச்சபையினால் நூற்றுக்கு நூறுவீதம் எதிர்க்கப்படுபவை. ஆனால் உலகினால் அவை வளர்க்கப்படுகின்றன.

எமது திருவழிபாட்டுக் கொண்டாட்டங்களை நோக்குவோம். திருவழிபாடு வாழ்வாக வேண்டும். வாழ்வும் வழிபாடும் இரண்டு அல்ல ஒன்று. ஆனால் எமது திருப்பலிக்கொண்டாட்டங்களில் முழுமையான பங்கெடுத்தல் நடைபெறுகின்றதா? யேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பின் முழுமையான அனுபவமே திருப்பலி என்பதை உணர்கின்றோமா? மறையுரை வேளையில் ஆலயத்துக்கு வெளியில் சென்று கதைத்துக் கொண்டிருப்பதும். நற்கருணை விருந்து நேரத்தை சினிமாவின் இடைவேளைபோல் பாவிப்பதும் சாதாரணமாகிவிட்டன. திருப்பலியை தொலைக்காட்சியில் கண்டுவிட்டு தங்கள் ஞானக்காரியம் முடிந்துவிட்டதாக நினைப்போரும் உளர். அத்துடன் திருமுழுக்கு, திருமணம், நோயில்பூசுதல் போன்ற அருட்சாதனங்களுக்கு மாத்திரம், அல்லது தங்களுடைய கோவில் என்ற கௌரவத்திற்காக மாத்திரம் ஆலயத்துக்கு வருபவர்களாக பல கிறிஸ்தவர்கள் வாழுகின்றார்கள். இது நம்பிக்கை குறைந்த, ஆனால் கடமைக்கான வாழ்வு முறையைக் குறிக்கின்றது.

ஆனால், திருச்சபை நம்பிக்கை பொய்க்காது இருக்க பல வழிகளில் முனைகின்றது.. கடந்த மூன்று ஆண்டுகளையும் தந்தை, சுதன், தூய ஆவிக்கு அர்ப்பணித்து எம்மை முழுதும் யூபிலி ஆண்டிற்கு ஆயத்தப் படுத்தியது. அன்பியங்களை உருவாக்கி ஆதிக்கிறிஸ்தவ வாழ்வில் விழுமியங்களை வாழ அழைக்கின்றது- நம்பிக்கைக்காக உழைக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறைவாக

யதார்த்தத்தை நோக்கும் போது "மனுமகன் வரும்போது மண்ணுலகில் விசுவாசத்தை காண்பாரோ" என்ற யேசுவின் வார்த்தைகள் அச்சுறுத்துவதாக அமைகின்றது. நம்பிக்கையற்ற மனித குலம் உருவாகிவிடுமோ என்ற அச்சம் எழுகின்றது. கடவுளாக வேண்டும் என்ற ஆதாமின் வரட்டுக்கௌரவம் மனுக்குலத்தை முழுவதும் ஆட்கொண்டு விடுமோ என்ற பயங்கர உணர்வு மேலோங்குகின்றது. மனிதனின் அபார அறிவியல் வளர்ச்சி இதைப் பிரதிபலிக்கின்றது என்றால் பிழையில்லை. ஏனென்றால் மனிதன் கடவுளுக்கு உரிய இடத்தை கொடுக்க தவறுகின்றான் என்பது உண்மை. இந்த மனிதனுடைய தான்தோன்றித் தனமான வாழ்வுமுறை அவனை இறைவனின் அன்பில் இருந்து தூரத்தள்ளிவிடும் என்பது நிஜம்தான். ஆனால் தொலைந்த ஆட்டைத்தேடும் நல்லாயன் அவர். எம்மை ஒருபோதும் அழியவிடப்போவதில்லை என்பது உறுதி. ஏனெனில் எங்கள் அன்னையாம் மரியாயின் தற்கால தரிசனங்கள் இதை நூற்றுக்கு நூறுவீதம் உறுதிப்படுத்துகின்றன. நாங்கள் புதுயுகத்தின் முதல் ஆண்டை நற்கருணை ஆண்டாக கொண்டாட இருக்க இயேசு கொரியாவில் நற்கருணையின் உண்மைத்தன்மையை மீண்டும் ஒருமுறை மனுக்குலத்திற்கு உணர்த்திவிட்டிருக்கின்றார், மனம்மாறி நற்கருணையில் விசுவாசம் கொள்ள, 'நானே உயிர்தரும் உணவு' என்ற வார்த்தையில் நம்பிக்கைகொள்ள எம்மை அழைக்கின்றார், புதுயுகம் தந்தையின் தண்டனைக்காலமல்ல மாறாக நம்பிக்கையின் கீற்றுக்கள் பரவும் உன்னத காலமாகும். நாமும் அதை வாழ புதுயுகத்தில் கால் பதிப்போம்.


> இறை நம்பிக்கையால் மனித மாண்பு ஒருபோதும் சிதையப் போவது இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறை நம்பிக்கையில்தான் விடுதலையின் ஆரோக்கியமான பயணங்கள் தொடரும்...

திரு. எஸ். எவ். சவுந்தரம்
மறை வேதியர்



மனித வாழ்விலே நீண்டதும், குறுகியதுமான பல பயணங்கள்... இப் பயணங்கள் பல அனுபவங்களைத் தருகின்றன. காலம், இடம், ஆட்கள், இவற்றால் சோதனைகளும், வேதனைகளும், நெருக்கடிகளும், அடிமைத்தனங்களும் இவை ஒருபுறம், மறுபுறத்தில் சந்தோசம் சமாதானம், நிறைவும், நிம்மதியும், இப்படிப் பல... வாழ்வுப் பயணத்தில் சந்திக்கும் எதிர்மாறான இவ் அனுபவங்கள் மறக்கமுடியாதவையாகி உயிரூட்டமுள்ள இலட்சிய நோக்குகளை நம்மில் உருவாக்குகின்றன. புதிய உறவுகளுக்கு, புதிய பயணங்களுக்கு இவை அடித்தளமிடுகின்றன. விடுதலையில் பிறக்கும் புதுப் பயணம் பங்கப்படாமல் தொடர நாம் பின்பற்றவேண்டிய பண்புப் பாடங்களைக் கற்பித்துக்கொண்டே இருக்கின்றன. இப்புதிய பாதையில் பத்திரமான பாதுகாப்பாக எதிரையும், புதிரையும் சந்திக்க வைத்த இறைவனே பின்தொடருகின்றார்.

> "ஆண்டவர் என் விளக்கிற்கு ஒளியேற்றுகின்றார்
> என் இருளை ஒளிமயமாக்குகின்றார்
> அவருடைய வழி நிறைவானது." (தி. பா. 8)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த சங்கீத வசனங்கள் மனத் தெளிவையும், புத்துணர்வையும் தருகின்றன. இறைமக்களின் விடுதலைப்பயணப் பாதையில் இறை நம்பிக்கையில் மலர்ந்த புதுவாழ்வுப் படிவங்களைத் தொடர்ந்து காண்போம்.

"அவர்களைக் கடவுளாகிய உமக்கே சற்று சிறியவர்களாக்கினீர் மாட்சிமையையும், மேன்மையையும் அவர்களுக்கு முடியாகச் சூட்டினீர். உமது கை படைத்தவற்றை அவர்கள் ஆளும்படி செய்தீர்"

(இரு. பா 8 : 5 – 6)

## தீமை தந்த அழிவு இறைவன் தந்த வாழ்வு

மண்ணுலகில் மனிதர் செய்யும் தீமை பெருகுவதையும், அவர்களுடைய இதய சிந்தனைகள் எல்லாம் நாள் முழுவதும் தீமையை உருவாக்குவதையும் ஆண்டவர் கண்டார். (தொட. நூல் 6;5). மண்ணுலகில் வெள்ளம் பாய்ந்து பெருகப் பெருக, வானத்தின் கீழ் எங்கும் இருந்த உயர்ந்த மலைகள் எல்லாம் நீரில் மூழ்கின. நிலத்தில் ஊர்வன பறவைகள், கால் நடைகள், காட்டு விலங்குகள், நிலத்தில் தவழ்வன, மனிதர் அனைவர் ஆகிய சதையுள்ள அனைத்தும் மாண்டன. (தொட. நூல் 7 : 20 - 21). ஆனாலும் தீமை சூழ்ந்திருந்த இந்தக் காலத்திலும் நோவா என்ற நல்லவர் ஒருவர் இருந்தார். நேர்மையானவராகவும், குற்றமற்றவராகவும், இருந்தார். நோவா கடவுளோடு நடந்தார். கடவுளோடு நடந்த நோவாவும் அவர் குடும்பத்தவரும் தீமையின் அழிவில் இருந்து காப்பாற்றப்பட்டனர். (தொ நூல் 8;15 - 19) நோவா ஆண்டவருக்குப் பலிபீடம் கட்டி ஆண்டவருக்கு நன்றிப்பலி ஒப்புக் கொடுத்தார்.

## இஸ்ராயேலின் முதுவர்களும் இறைவன் தந்த பெருவாழ்வும்

ஆபிரகாம், ஈசாக், யாக்கோபு இவர்கள் இறைவனின் மக்களான இஸ்ராயேலரின் பிதாக்கள். இவர்கள் தங்கள் வாழ்வின் முடிவை ஆண்டவரிடம் ஒப்படைத்துவிட்டு அவர் பேரில் நம்பிக்கை வைத்து, அவர் எல்லாம் செய்வார் என்று அவரில் முழுமையாகத் தங்கி வாழ்ந்தவர்கள். ஆண்டவரும் அவர்களை எல்லாத் தீமைகளில் இருந்தும் மீட்டு, ஆசீர் அளித்து நலன்களால் நிரப்புகின்றார். "நான் உன்னோடிருப்பேன் நீ எங்கு சென்றாலும் நான் உனக்குக்காவலாயிருந்து...... நான் உனக்கு வாக்களித்ததை நிறைவேற்றுமளவும் உன்னைக் கைவிடமாட்டேன்" (தொநூல் 28:15)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எகிப்தின் அடிமை வாழ்வும் இஸ்ராயேல் விடுதலையும்

எகிப்து நாட்டிலே இஸ்ராயேல் இனம் அடிமைத்தளையில் அவதியுறுகின்றது. படிப்படியாக கட்டளைகளும், கொடுமைகளும் வளர்ந்து கொண்டே போகின்றன. முழு இனமே அழிந்துவிடுமோ என்று அஞ்சுமளவுக்கு இன அழிப்புகளும், கொடுமையான சட்டங்களும் அமுலுக்கு வந்து நடைமுறைப்படுத்தப்படுகின்றன. சமய, சமூக, கலாச்சார, வாழ்வுச் சுதந்திரம் கூட பறிக்கப்பட்ட பாதகமான நிலை. ஒன்றா, பத்தா, பல நூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட அதிகொடுமையான அடிமை வாழ்வு. இஸ்ராயேல் மக்கள் அடிமைத்தனத்தின் கொடுமையால் தனியாகத் தவித்தனர், துடித்தனர். கண்ணீர் விட்டுக் கதறினர். கடவுளே காப்பாற்றும் என குரலெழுப்பிக் கூக்குரலிட்டனர்.

''ஆண்டவருடைய ஆவி என்மேலே, அவர் எனக்கு அருள்பொழிவு செய்துள்ளார். ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிக்கவும், சிறைப்பட்டோர் விடுதலையடைவர், பார்வையற்றோர் பார்வை பெறுவர் என முழக்கமிடவும், ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும், ஆண்டவர் அருள் தரும் ஆண்டை முழக்கமிடவும் அவர் என்னை அனுப்பியுள்ளார்'' (லூக் 4 : 18 - 19).

அவர்களது இறை நம்பிக்கை, வேண்டுதல் வீண்போகவில்லை. ''ஆண்டவர் என் மக்கள் படும் துன்பத்தை என் கண்களால் கண்டேன்! அடிமை வேலை வாங்கும் அதிகாரிகளை முன்னிட்டு அவர்கள் எழுப்பும் குரலையும் கேட்டேன். ஆம்! அவர்களின் துயரங்களையும் நான் அறிவேன். எனவே அவர்களை எகிப்தியரின் பிடியிலிருந்து விடுவிக்கவும் பாலும் தேனும் பொழியும் பரந்ததோர் நாட்டிற்கு அவர்களை நடத்திச் செல்லவும் இறங்கி வந்தேன். இதோ இப்போது இஸ்ராயேல் மக்களின் அழுகுரல் என்னை எட்டியுள்ளது. எகிப்தியர் அவர்களுக்கு இழைக்கும் கொடுமைகளைக் கண்டுள்ளேன்'' (விடு. பய. 3 : 7 - 9) என்று சொல்லி ஆரோனையும், மோசேயையும் மக்கள் மத்தியில் அனுப்பி, தம் மக்கள் பொருட்டு எகிப்திலே பல வல்ல செயல்களைச் செய்து, எகிப்திய மன்னனையும், அவர் தம் மக்களையும் கதிகலங்க வைத்த தம் மக்களை அடிமைத்தனத்திலிருந்து விடுவித்தார். செங்கடல், பாலைவனம் வழியாக வழிநடத்தி தீமையிலிருந்து விடுவித்து மீட்பளித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயேசுவின் செபமும் விடுதலை முழக்கமும்

இயேசு சிறு வயதிலிருந்தே பெற்றோரிடம் செபப் பழக்கத்தைக் கற்றுக் கொண்டார். நற்செய்தியாளர் லூக்கா சொல்லுவதுபோல், நசரேத்தில் தமது குடும்பத்தின் பணியோடு இருந்து ஞானத்திலும் உடல் வளர்ச்சியிலும் மிகுந்து கடவுளுக்கும், மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்து வந்தார் (லூக் 2 : 25). தொழுகைக்கூடங்களுக்குச் சென்று செபம் செய்வார் 4 : 16. சாத்தானின் சோதனைக்கு முன்னும், பின்னும் செபத்தில் நிலைத்திருந்தபடியால், அவர் சவால்கள் நிறைந்த தமது விடுதலைப் பயணத்தின் துணிவான செயல்களுக்கு அடித்தளம் இடக்கூடியதாக இருந்தது. "ஆண்டவருடைய ஆவி என் மேலே, அவர் எனக்கு அருள்பொழிவு செய்துள்ளார் ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிக்கவும், சிறைப்பட்டோர் விடுதலையடைவர், பார்வையற்றோர் பார்வை பெறுவர் என முழக்கமிடவும், ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும், ஆண்டவர் அருள்தரும் ஆண்டை முழக்கமிடவும் அவர் என்னை அனுப்பியுள்ளார்" (லூக் 4 : 18 - 19). இது அவர் செய்யப்போகும் பணியின் பாரம். சந்திக்கப்போகும் சவால்களின் சரித்திரங்கள். ' போலிப் புகழுக்காக எழுப்பப்படவிருக்கும் கோபுரக் கோவில்களின் அத்திவாரங்களின் ஆத்துப்படும் கடப்பார் சட்டம், சடங்கு சம்பிரதாயம் என்று சொல்லி மக்களின் கண்களை மறைத்து, அவர்கள்மேல் சவாரி செய்யும் வேடதாரிகளுக்குக் கிடைக்கப் போகும் சவுக்கடிகளின் சப்தம். அடங்கி ஒடுங்கி, உரிமைகள் மறுக்கப்பட்டு அல்லது மறைக்கப்பட்டு அதிகாரத்தால், அந்தஸ்தால் பழமை தந்த வழமைகளால் ஏதிலிகளாக்கப்பட்டிருக்கும் சாதாரணமானவர்களை உசுப்பிவிட்டு உண்மையை நோக்கி போர் அணி திரளவைக்கும் சங்கொலி. திருநூல் தந்த திரவியம், கடவுள் வழங்கிய விடுதலை வாழ்வை இந்த உலகத்தில், மக்கள் சமூகத்தில் எங்கள் உள்ளங்களில் பிறப்பித்து, வாழ்விக்கப்போகின்ற ஒடைதுங்கள்.

> உலகில் அமைதி நிலவவேண்டுமாயின், இறைவன் வகுத்த ஒழுங்கு முறையை அனைவரும் கடைப்பிடிக்க வேண்டும். தனிமனிதர், குழுக்கள், நாடுகள், அனைத்தும் எல்லா மனிதருடையவும், குழுக்கள் மற்ற நாடுகளது உடமைகளை மதிக்கவேண்டும்.

மலைப் பொழிவுக்கும் மங்காத போதனைகளுக்கும் உடற்பிணி தீர்ப்புக்கும் உவந்தளித்த உடற் சாவுக்கும் இறையேசுவின் தந்த திருப்பொழிவு. இயேசுவின் செப வாழ்வால் தந்த புதுவாழ்வு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று உலகத்தின் முகத்தே விடுதலை, சுதந்திரம், அமைதி மகிழ்ச்சி எங்கே...?

இன்று உலகத்தின் எத்திக்கிலும் போர் முழக்கம், அறிவும், ஆற்றல்களும், வளங்களும், அடிமைப்படுத்தல்களும், அழிவுக்கே அதிகமாகப் பயன்படுகின்றது. அமைதிக்கான குரல்கள், அறிக்கைகள், அமைப்புகள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கின்ற அதேசமயத்தில், தீமைகளின் பல்வேறு வடிவங்களும், கொடூரங்களும், அவல மரணங்களும் பெருக்கெடுத்துக்கொண்டே போகின்றன. இயேசுவின் இரத்தத்தால் பெறப்பட்ட விடுதலை, அமைதி, மகிழ்வு, எங்கே...... எப்போது? "உங்களுள் பெரியவராய் இருக்க விரும்புபவர் உங்கள் தொண்டராய் இருக்கட்டும். உங்களுள் முதன்மையானவராக இருக்க விரும்புபவர் அனைவருக்கும் பணியாளராய் இருக்கட்டும். ஏனெனில் மானிட மகன் தொண்டு ஏற்பதற்கல்ல, மாறாக தொண்டு ஆற்றுவதற்கும், பலருடைய மீட்புக்கு ஈடாகத் தமது உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார்." (மாற்கு 10 : 43 - 45). இன்று விடுதலையை விரும்பும் ஒவ்வொரு நபரும் படிக்கவேண்டிய முதல் பாடம் இது.

> அழியும் உடலுக்குள் ஆத்மாவாக இருக்கும் மனிதத்தை, அதன் உணர்வுகளை, அதன் தேவைகளை, அதன் ஏக்க தாக்கங்களை மிதியாமல் மதிப்போம், விடுதலை காண்போம்.

உலகில் அமைதி நிலவவேண்டுமாயின், இறைவன் வகுத்த ஒழுங்கு முறையை அனைவரும் கடைப்பிடிக்க வேண்டும். தனிமனிதர்' குழுக்கள், நாடுகள், அனைத்தும் எல்லா மனிதருடையவும், குழுக்கள் மற்ற நாடுகளது உரிமைகளை மதிக்கவேண்டும். மேலும் ஆயுத வலிமையைக் கொண்டு பிறநாடுகளை அச்சுறுத்தாமல், உண்மையான நம்பிக்கையை வளர்த்து, அமைதியை நிலைநாட்டுவது அனைத்து நாடுகளின் கடமையாகும். திருத்தந்தை 23 ம் அருளப்பரின் அறைகூவல் இது. "மனிதரிடையே நீதி நிலவினால்தான் அமைதி உருவாகும்" திருத்தந்தை ஆறாம் சின்னப்பருடைய பாடம் இது.

"எல்லா முயற்சிகளையும் பயன்படுத்தி அழிவுக்கான போர் நிகழ்வுகளைத் தடுத்தே ஆகவேண்டும். படைக்கலன்களைக் குறைத்து மனிதர்கள் அறநெறி மதிப்பீடுகளை மதிக்கக் கற்றுக் கொள்ளவேண்டும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது இன்றைய திருத்தந்தை 2 வது அருளப்பரது குரல். இன்று மனிதனுக்கு அவசியமாக, அவசரமாகத் தேவையானது ஒருவரையொருவர் உண்மையாக அன்பு செய்யும் இயேசுவின் அன்புதான். முகமூடி வாழ்க்கைகளும், சுயநல அன்பும் மனிதத்தை மிதித்து மானிட அழிவுகளையே அதிகமாகக் கொண்டுவரும், அன்பு, இயேசுவின் மதிப்பீடுகளில் தோய்ந்து, உண்மையானதாக வெளிவர இறைநம்பிக்கையோடு கூடிய செபமே நமக்குத் துணை செய்யும். 'தூய ஆவியார் நமது வலுவற்ற நிலையில் நமக்குத் துணைநிற்கின்றார். ஏனெனில் எதற்காக எப்படி வேண்டுவது என்று நமக்குத் தெரியாது. தூய ஆவியார் தாமே சொல்வடிவம் பெறமுடியாத நமது பெருமூச்சுக்களின் வாயிலாய் நமக்காகப் பரிந்து பேசுகின்றார்'' (உரோ 8 : 26). ''நீங்கள் என் பெயரால் கேட்பதெல்லாம் செய்வேன்'' (யோவான் 14 : 14).

## முடிவாக:

நம்மில், குடும்பத்தில், பங்கில், பணியகத்தில், தலத்திருச்சபையில் முழுத் திருச்சபையிலும் விடுதலையின் ஆரோக்கியமான பயணங்கள் தொடர இறை நம்பிக்கையோடு இறுக்கமாகச் செபிப்போம். அமைதிக்குத் தடையாக இருக்கும் அனைத்துத் தடயங்களையும் அறுத்தெறிய துடிப்போம். பழக்கத்தால், பாரம்பரியத்தால், சமூகத்தின் அமைப்புகளால் வழக்கமாக்கிக் கொண்ட அகந்தையின், ஆணவத்தின் அந்தஸ்தின், செல்வாக்கின், தடித்த போர்வைகளைக் கிழிப்போம். அழியும் உடலுக்குள் ஆத்மாவாக இருக்கும் மனிதத்தை, அதன் உணர்வுகளை, அதன் தேவைகளை, அதன் ஏக்கதாக்கங்களை மிதியாமல் மதிப்போம். தொடர்ந்தும்செபிப்போம், விடுதலை காண்போம்.

## துணைநின்ற நூல்கள்

1) திரு விவிலியம், 2) தோழன் சஞ்சிகை 1971,
3) கடவுள் தந்த கவிதை, 4) கல்லறைப் பூக்கள்,
5) அவனியில் அமைதி, 6) மறையருவி 1998



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறீஸ்துவின் உயிர்ப்பும் கிறீஸ்தவர்களும்

அருட்சகோ. சா. ஜஸ்ரின்
2-ம் வருட இறையியல்

## முகப்புரை :

"கிறீஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நாங்கள் பறைசாற்றும் நற்செய்தியும் நீங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையும் பொருளற்றதாயிருக்கும்."

1 கொரி. 15: 14.



இன்று மனித வாழ்வானது விடை காண முடியாத வினாவாக, கலங்கரை விளக்கைத் தேடும் படகைப்போல் சாவின் நிழல்களின் மத்தியில் நியங்களைத்தேடும் ஓர் சங்கட நிலைக்குரியதாக மாறிவிட்டது என்றால் அது ஐயப்பாட்டுக்கு உரியதோர் நிகழ்வு அல்ல. துப்பாக்கிகள் உயிர்குடிக்க, போர் தனது மிருகத்தன்மையை அகலத் திறக்க, மனிதத்தை விழுங்கும் வெறிகொண்ட மனித மனங்கள் முட்புதராகப்பட எப்படி மனித உயிர் வாழ்க்கை நடத்த முடியும்? சாவு என்ற படுகுழி பல உயிர்களை இரையாக்கக் கேட்கிறதே. இதற்கு [படுகுழி] இரையாகும் உயிர்கள் எல்லாம் வெறுமனே அழிந்து போகின்றன என்று யார் சொல்லுகிறானோ அவன் கிறீஸ்துவுடைய உயிர்ப்பை அறியாதவனாக, அல்லேல் ஏற்றுக்கொள்ளாதவனாக இருப்பவன்தான் என நினைக்கின்றேன். மாறாக ஓர் கிறீஸ்தவன் கிறீஸ்துவின் உயிர்ப்பிலே நம்பிக்கை கொண்டவனாக, அதையே தனது இறுதி நோக்காகக் கொண்டு தந்தையை முகமுகமாகக் காணும் பாக்கியம்பெற நாளாந்தம் தனது பாவ வாழ்வுக்கு இறந்து அருள்வாழ்வுக்கு உயிர்பெறுகிறான். இவனுக்கு சாவு என்பது பரலோக வாசலின் திறவு கோலாகும். இதுவே கிறீஸ்துவில் வாழும் நம் எல்லோரதும் ஆழ்ந்த விசுவாசமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய ஏற்பாட்டின் ஒளியில் "உயிர்ப்பு"

புதிய ஏற்பாடானது பல நிகழ்வுகளையும், பகுதிகளையும் எமக்குத் தந்து உயிர்ப்பின் கனாகனத்தையும் அதன் மகிமையையும் புலப்படுத்தி நிற்பதை நாம் காணலாம். உதாரணங்களாகப் பார்ப்போமானால்:

யாயீருடைய மகளை உயிர்ப்பித்ததன் வழியாக தனது தந்தையில் விசுவாசம் கொண்டவர்கள் அனைவரும் இறுதி நாளில் உயிர் பெறுவர் என்பதை இயேசு சுட்டிக்காட்டுகிறார். மாற்கு 5 : 41. மேலும் இயேசு விதவைப்பெண்ணின் மகனையும் லாசரையும் உயிர்ப்பித்து உயிர்ப்பு உண்மையானது எனத் தெளிவு படுத்துகிறார்,

> இதற்கு (படுகுழி) இரையாகும் உயிர்கள் எல்லாம் வெறுமனே அழிந்து போகின்றன என்று யார் சொல்லுகிறானோ அவன் கிறீஸ்துவுடைய உயிர்ப்பை அறியாதவனாக, அன்றேல் ஏற்றுக் கொள்ளாதவனாக இருப்பவன்தான் என நினைக்கின்றேன்.

ஏன் இன்னும் மேலாக தாமே சாவின் கொடும்பிடியில் இருந்து உயிர்த்தெழுகின்றார். தாமே முழுமனே சாவுக்குக் கையளித்து சிலுவை மரணத்தைக் கட்டியணைத்து மூன்றாம் நாளில் உயிர் பெறுகிறார். இதன்மூலமாக சாவின் கொடுமுடி அழிக்கப்படுகிறது. இதைத் திருத்தூதர் பணியில், "இயேசுவைக் கடவுள் உயிர்த்தெழச் செய்ததன் வழியாக மூதாதையருக்கு நிறைவேற்றுவதாக கொடுத்த உடன்பாட்டை நிறைவேற்றினார்" 13 : 32. ஆம் நாம் வெறுமனே இவ்வுலக வாழ்வின் முடிவைத்தேடி அல்ல மாறாக மறுவுலக வாழ்வைத்தேடிப் பயணம் செய்கிறோம் என்பதே அவ்வாக்குறுதி. மேலும் புனித பவுல் கொரிந்திய மக்களுக்கு எழுதிய முதல் கடிதத்திலே உயிர்ப்பானது உடலின் முழுமையான மாற்றம் என்றும், இம்மாற்றமானது ஆன்மீகம் சம்பந்தமானதும், அழிவுக்குட்படுத்தப்படாததும் எனத் தெளிவாகத்தருகிறார். 1கொரி.15 : 35 - 53. ஒட்டுமொத்தத்திலே புதிய ஏற்பாடானது கிறீஸ்துவுடைய உயிர்ப்பை மையப்படுத்தியதாகவும், எமது விசுவாசம் இவ்வுயிர்ப்பின் மேல் உள்ள நம்பிக்கையால் கட்டி எழுப்பப்படுவதாகவும் சித்தரிக்கின்றது. ஆகவே இயேசுவில் நம்பிக்கை கொண்டோர் யாவரும் சாவின் பிடியின் இருந்துவிடமுடியாது. சாவு அவர்களை ஆட்கொள்ள இயலாது. ஏனெனில் நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பதும், இயங்குவதும் கிறிஸ்துவிலேதான். அவர் வாழ்கிறார். எனவே நாமும் வாழ்கிறோம். இவ்விசுவாச உச்சாரணமே புதிய ஏற்பாடு ஊடாக எதிரொலிப்பதை நாம் காணலாம்.

## கிறிஸ்தவப்பார்வையில் சாவும் உயிர்ப்பும்

மனிதனாகத்தோன்றும் ஒவ்வொருவனுக்கும் இறப்பு என்பது பிறப்பிலேயே நிச்சயிக்கப்பட்டு விடுகிறது. பிறப்பும் இறப்பும் வாழ்வின் இணைபிரியாத் தோழர்கள். இன்று இறப்புக்கள் மலிந்து, இறப்புக்கள் அடையாளம் காணப்படமுடியாத உடல்களாக வீதியோர மெங்கும், தேடுவாரின்றி நாய்களுக்கு உணவாக மதிப்பற்றுக்கிடப்பது நாம் காணும் உண்மை. இந்த இழப்புக்கள் (உயிர் இழப்பு) எல்லாம் நான் முகப்புரையில் குறிப்பிட்டது போன்று ஓர் கிறிஸ்தவனுக்கு புதுப்பரிமாணத்தைக் கொடுக்கவேண்டும், கொடுக்கின்றது. இதை புனித பவுல் மிக அழகாகச் சொல்லுவார். அழிவுக்குரியதாய் விதைக்கப்படுவது அழியாததாய் உயிர்பெற்று எழுகின்றது, மதிப்பற்றதாய் விதைக்கப்படுவது மாண்புக்குரியதாய் உயிர்பெற்று எழுகிறது'' 1கொரி 15 : 42 — 43 என்று. ஆம் நாம்கொண்டுள்ள இந்த உடல் இவ்வுலக வாழ்வின் முடிவில் பெறுமதியற்றதாக, பொருளற்றதாக கருதப்பட்டாலும், கிறிஸ்துமேல் கொண்ட விசுவாசம் எமக்கு மறு வாழ்வின் வெற்றிவாகையைச் சூட்டுகின்றது.

ஆகவே கிறீஸ்துவில் ஞானஸ்ஞானம் பெற்ற நாம் அனைவரும் அவருடன் இறந்து, அவருடன் உயிர்ப்போம் என்ற அழியாத ஆழமான நம்பிக்கை கொண்டு வாழ்கிறோம். எமக்குச்சாவு என்பது உயிர்ப்பின் மறுபக்கமாக, முதற்படியாக துலங்குகிறது. கிறீஸ்து இறந்தார் உயிர்ப்பு உண்டு என்றுகாட்ட, இறந்தவர்களை உயிர்ப்பித்தார் விசுவாசம் கொள்ளும் அனைவரும் முடிவில்லா வாழ்வைப் பெறவேண்டும் என்பதற்காக.

உயிர்ப்பு என்பது நாம் கிறீஸ்துவில் பாவத்துக்கு இறந்து அருள் வாழ்வுக்கு உயிர்பெற்று எழுவதை உணர்த்தும் ஓர் உண்மை அனுபவமாக வேண்டும். இவ்வனுபவம் வெறுமனே பக்தி காரணமாக மேலெழுந்தவாரியாகப் பேசிவிட்டு விட்டுப்போகும்சம்பவம் மட்டுமல்ல மாறாக, முறையான கட்டமைப்பான வாழ்வின் செயற்பாடுகள் ஊடாக எடுத்துரைக்கப்படவேண்டும். நாம் ஞானஸ்ஞானத்தின் மூலம் தொடங்கிய புதுவாழ்வானது இவ்வுலக வாழ்வு முடிவடைவதோடு முற்றுப்பெறுவதென்றல்ல. மாறாக இறப்புக்கப்பால் உயிர்ப்பு உண்டு என்பதை நம்பி தொடரும் ஓர் அனுபவ வாழ்வாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்காக இவ்வுலக வாழ்வின் போராட்டம் கடலென எம்மைச் சூழ்ந்து வருகின்ற போதெல்லாம் அதில் நீச்சல் போட்டு கரைசேர முயற்சிக்க வேண்டும். இறைவிழுமியங்களை வாழ முற்படவேண்டும். ''நீங்கள் எல்லோரும் ஒளியைச் சார்ந்தவர்கள் பகலில் நடப்பவர்கள். நாம் இருளையோ இரவையோ சார்ந்தவரல்ல.'' (1 தெச 5.5.) ஏனெனில் நாம் உயிர்ப்போம் என்னும் அசையாத விசுவாசத்துடன் வாழுகிறோம். அந்த உயிர்ப்பைத்தர வல்லபரின், ஒளிக்குரிய வாழ்வு வாழ்வதே உயிர்ப்புக்கான திறவுகோலாகும். எவன் தன்னை மறுக்கிறானோ அவன் உயிர்ப்பின் சக்தியால் ஆட்கொள்ளப்படுகிறான் என்றால் அது மிகையாகாது.

மேலும் எமது நாளாந்த வாழ்விலே இறைவனுடன் ஒப்புரவாகின்றோம். இந்த ஒப்புரவு ஞானஸ்ஞானம் ஊடாக எம்மை வந்தடைந்தது. நாளாந்தம் பாவத்துக்கு இறக்கவும் புதுவாழ்வைக் கிறிஸ்துவில் காணவும் உயிர்த்தெழுகிறோம். இவ்வருட்சாதன வாழ்வு எம்மைப் பாஸ்கா மறைபொருளை நாளாந்த வாழ்வாக்க அழைப்பு விடுக்கின்றது. ஆகவே ஒவ்வொரு கிறிஸ்தவனும் கிறிஸ்துவின் உயிர்ப்பைப் பாஸ்கா மறைபொருளாகவும், தனது வாழ்வின் கதியாகவும், எதிர்நோக்காகவும் கொண்டு வாழவேண்டும். கிறிஸ்து ஒருவரே உயிர்ப்புத்தர வல்லபர், அவராலேயே மீட்புண்டு என்பதை நாம் ஏற்றுத்தான் ஆகவேண்டும்.

## சிலுவையும் உயிர்ப்பும்

கிறிஸ்துவுடைய சிலுவை மரணத்தில் இருந்து அவரது உயிர்ப்பை இலகுவிலே எம்மால் பிரித்துவிட முடியாது. ஏனெனில் சிலுவை இன்றி உயிர்ப்பு இல்லை. உயிர்ப்புத்தான் கிறிஸ்தவ வாழ்வின் அடிநாதமும், விசுவாசத்தின் உச்சாரணமுமாகத் துலங்குகிறது. ''திகிலுற வேண்டாம். சிலுவையில் அறையப்பட்ட நாசரேத்தூர் இயேசுவைத் தேடுகிறீர்கள், அவர் உயிருடன் எழுப்பப்பட்டார்'' (மாற்கு 16.6.) இறந்த கிறிஸ்து உயிர்த்தார், வாழ்வைத்தாமே பெற்றார். இவருடைய அன்பின் கீழ்ப்படிதல் இறந்தோருக்கும் வாழ்வோருக்கும் பாவத்தின் வெற்றியாகும். நற்செய்திகள் கிறிஸ்துவுடைய வாழ்வையும், பணியையும் ஓர் துடிப்புள்ளதாகச் சொல்லிக்காட்ட இவருடைய பாடுகள், சிலுவை மரணம், உயிர்ப்பு போன்ற நிகழ்வுகளுடன் தொடர்புபடுத்துகின்றன. இச்சிலுவையே இன்றும் உலகை வழிநடத்துவதாக நாம் கருதுகிறோம். சிலுவைதான் எமது மீட்பின் சின்னம்.

இன்று கிறிஸ்தவர்களாகிய நாம் எந்த அளவுக்கு சிலுவையின் மகத்துவத்தையும் அதன் தாற்பரியத்தையும் உணர்ந்து செயற்படுகிறோம் என்பது ஓர் கேள்விக்குறிதான். ஏனெனில் சிலவேளைகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் கடவுளின் திட்டத்தையும், எதிர்பார்ப்பையும் மதிக்கத்தவறும் போது சிலுவை பொருளற்றதாக மாறிவிடும், உண்மையான கிறீஸ்தவ நம்பிக்கையும்' எதிர்பார்ப்பும் சிலுவை ஊடாக வரும் உத்தானமே. எவ்வாறு கிறீஸ்து வேதனைகளையும் சோதனைகளையும் சவாலாக்கி அவற்றை சிலுவைமூலம் வென்றெடுத்து உயிர்ப்பின் மகிமையைத் தந்தாரோ, அவ்வாறே ஒவ்வொரு கிறீஸ்தவனும் வாழ்வின் துன்பதுயரங்களை வரப்போகும் மகிமைக்கு இறைவன் கொடுக்கும் சிலுவையின் வழிகள் என்ற மனத்துடன் ஏற்று வாழவேண்டும். அப்போது உயிர்ப்பின் மகிமைக்கு உரித்துடையவராக துலங்கமுடியும்.

சிலுவையில் நமக்காக இயேசு சிந்திய இரத்தத்தினால் நாம் விடுதலை அடைந்தோம். அவர் தம் உடலையும், குருதியையும் எமக்கு சிலுவைமூலம் கல்வாரியில் வாரி வழங்கினார். இது சிலுவையினால் நாம்பெறும் வாழ்வாக மாறுகின்றது. எனவேதான் நாம் இந்த வாழ்வைக் கற்றுக்கொள்ள எமது நாளாந்த வாழ்வின் சிலுவைகளைப் பொருளுள்ளவைகளாக மாற்ற முற்படுகிறோம், முற்படவேண்டும். 'கல்வாரிப்பாடத்தைக் கற்றுத் தரவேண்டும் கற்றிட்ட பாடத்தை வாழவரம் வேண்டும் 'என்று தினமும் நாம் பாடவேண்டும். நம்பிக்கை தரும் சிலுவையை கட்டி அணைக்கவேண்டும்.

## முடிப்புரை :


சாவு என்பது கிறீஸ்தவர்களாகிய நமக்கு முடிவில்லா வாழ்வின் தொடக்கமே. சாவினால் வாழ்வு மாறுபடுகின்றது அன்றி அழிக்கப் படுவதில்லை. பிறக்கும் எவனும் இறக்க வேண்டியவன். ஆனால் கிறீஸ்தவன் ஓர் இறப்பை உயிர்ப்பின் நுழைவாயிலாக நோக்குகிறான், இந்த நுழை வாயிலை அடைய நாளாந்த துன்பதுயரங்களை சிலுவையாக ஏற்றுக்கொள்ள வேண்டியவனாகின்றான். ஏனெனில் சிலுவை மூலம்தான் உயிர்ப்பு, மீட்பு உண்டு. கிறீஸ்துவிலே நாளாந்தம் எம் பாவ வாழ்வுக்கு இறந்து அருள்வாழ்வுக்கு உயிர்த்தெழுகிறோம். கிறீஸ்து ஒருவரால்த்தான் உயிர்ப்பைக் கொடுக்கமுடியும். ஏனெனில் சாவை வென்ற சத்தியசீலன் அவர்தான். நாம் வாழ்ந்தாலும் இறந்தாலும் அவருக்காகவே. எனவே அவருக்காக வாழும் நாம் இவ்வுலக வாழ்வின் இருளிற்கு உரிய வாழ்வை விட்டு ஒளிக்குரிய வாழ்வை வாழ்ந்து உயிர்த்தெழுப்பப்படுவதற்கு எம்மைத் தயாராக்குவோம். நாளாந்தம் கிறீஸ்துவின் பாடுகள் மரணம் உயிர்ப்பில் பங்கெடுப்போம். அவருக்கு சாட்சிகளாவோம். அப்போது இயேசு எம்மைப் பார்த்து ''நன்று நன்று நம்பிக்கைக்கு உரிய நல்ல ஊழியனே... உன் தலைவனது மகிழ்ச்சியில் பங்குகொள்'' என்பார். உயிர்ப்பின் மகிமையை எமக்குக் கொடுப்பார். மத்தேயு25 : 21



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய பாலைவனத்தின் எதிரொலி

அருட்சகோ ஜீ றொ. வசந்தசீலன்
2-ம் வருட இறையியல்



''பாலைநிலத்தில் குரல் ஒன்று முழங்குகின்றது. ஆண்டவருக்காக வழியை ஆயத்தமாக்குங்கள்... அப்போது ''நாங்கள் என்னசெய்யவேண்டும்'' என்று கூட்டத்தினர் அவரிடம் கேட்டனர். அதற்கு அவர்மறுமொழியாக, ''இரண்டு அங்கிகளை உடையவர் இல்லாதவரோடு பகிர்ந்து கொள்ளட்டும் உணவை உடையவரும் அவ்வாறே செய்யட்டும்'' என்றார். வரிதண்டுவோரும்... உங்களுக்குக் குறிக்கப்பட்ட தொகைக்கு அதிகமாக எதையும் தண்டாதீர்கள்'' என்றார். படைவீரரும்... ''நீங்கள் எவரையும் அச்சுறுத்திப் பணம் பறிக்காதீர்கள் யார்மீதும் பொய்க்குற்றம் சுமத்தாதீர்கள். உங்கள் ஊதியமே போதும் என்றிருங்கள்'' என்றார். (லூக். 3; 4).

அன்று, இஸ்ராயேல் மக்கள் மத்தியில் வாழ்வும் – வழிபாடும் பிரிந்து நின்றன, – விளைவு – அரசியலை, பொருளாதாரத்தை, சமுதாயத்தை – அநீதி, அக்கிரமம், ஆட்சி செய்தன. வாழ்வு பாலைவனப் பயணமாகியது. அப்பயணத்தின் எதிரொலியே ஸ்நாபக அருளப்பரின் இம் முழக்கம்.

இன்று. வாழ்வும் வழிபாடும் வேறுபட்டுள்ளன. இன்னோர் முறையில், செபம் வேறு செயல் வேறு – யதார்த்தமான நிலை

இத் தாற்பரியத்தின் காயங்கள், வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும், அரசியலில், பொருளாதாரத்தில், சமூகத்தில் புற்று நோயாகப் புரையோடிக் கொண்டிருப்பது அனுபவம். கிறிஸ்தவனும் விதிவிலக்கல்லன். இங்குதான் பாலைவனப் பயணம் பரிணமிக்கின்றது. அன்றைய குரல் இன்றும் எதிரொலிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் புற்று நோய் அரசியலில், பொருளாதாரத்தில், சமுதாயத்தில் எவ்வாறு புரையோடியுள்ளது என்பதையும், திருச்சபையின் மருந்தையும், ஈற்றில் அதை எவ்வாறு நாம் உட்கொள்ள முடியும் என்பதையும் நோக்குவோம்.

அரசியல்:

நீதிக்குப் பதில் – அநீதி; நியாயத்திற்குப் பதில் – அநியாயம் உண்மைக்குப் பதில் – பொய்மை... தொடர்கதைகள். நாட்டின் அரசியலை வர்ணிக்கும் காரணிகள். ஆனால், பல்வேறு வெளிப்பூச்சுக்களினால் களங்கம் மறைக்கப்பட்டு, வெண்திரையில், நிழற்படமாகக் காட்டப்படுகின்றது. ஒளி உட்புக முடியாத இருள் பிரதேசமாயுள்ளது அரச நிறுவனங்கள். அலுவலக வாயிலிற் காவல் நிற்கின்றது வர்க்க வேறுபாடு, சர்வசாதாரணமாய் உலா வருகின்றன ஊழல் மோசடிகள்.

அடிப்படை உரிமையை அனுபவிக்க முடியாத நிலை. சுதந்திரம் புத்தி சுவாதீனம் இழந்து தவிக்கின்றது. உரிமைகள் முடமாக்கப்பட்டு வீழ்ந்து கிடக்கின்றன.

பிள்ளையின் மறைவு பெற்ற மனத்தைப் பித்தாக்கியுள்ளது. கணவனின் இழப்பு மனைவியின் மனத்தைக் கல்லாக்கியுள்ளது. உறவுகளின் பிரிவு உறவினரின் உள்ளத்தை உருக்கியுள்ளது. இத்தனையிலும் அகப்படாதோர் அருகிருந்தும் ஐந்துக்களாகி, ஆசையிலும், ஆபரணத்திலும், அதிகாரத்திலும் மயக்கத் தேன் மண்டுகின்றனர்.

அரசியலில் ஆண்டவன் அந்நியனும், அகதியுமாக்கப்பட்டுள்ளான் கிறிஸ்தவன், கிறிஸ்தவ விழுமியத்தைத் தொலைத்த பாவியாய்ப் பரிதவிக்கின்றான்.

> இன்று, வாழ்வும் வழிபாடும் வேறுபட்டுள்ளன. இன்னோர் முறையில், செபம்வேறு செயல் வேறு - யதார்த்தமான நிலை.

திருச்சபையானவன் அன்றும் – இன்றும் – பாலைவன அனுபவத்தில் தனது குரலை விடியலின் கீதமாக – வாழ்வு சுரக்கும் வாய்க்காலாக முழங்குகின்றான், எட்மை ஆவிக்குத் திறந்துவிட்டால் அத்தனையும் வெளியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருச்சபையின் பதில்;

''மேலும் இவர்கள் அநீதி அடக்கு முறைகளுக்கு எதிராகவும் தனியொருவனுடைய அல்லது அரசியற் கட்சியினுடைய சர்வாதிகாரப் போக்கு, மற்றும், கொடுங்கோலாட்சிக்கு எதிராகவும், நேர்மையான நடத்தையால் முன்மதியோடு போராடவேண்டும். கபடின்றி நடுநிலை நேர்மையோடு... அனைவருடைய நலனுக்காகவும் தங்களையே அர்ப் பணிக்க வேண்டும்'' (இ. உ. தி. 75).

## பொருளாதாரம்:

அந்தப் புற்றுநோய்ப் பிரசவத்தின் பிறிதொரு தாக்கமே பலருக்குப் பெருகிவிட்டதும், சிலருக்குச் சிறுத்துவிட்டதுமான பொரு ளாதாரம்.

கோளமயமாக்கலில் உலகம் குறுகிவிட்டது. பொருளாதார நோக்கம் பெருகிவிட்டது. கணப்பொழுது உற்பத்தி உச்சநிலை, ஆனால் கணப்பொழுதில் பட்டினியால் பிரியும் உயிரின் தொகை அதைவிட மேல்நிலை.

முதலாம் மண்டல நாடுகள் மூன்றாம் மண்டல நாடுகளின் வளத்தில் முத்துக் குளிக்கின்றன. மூன்றாம் மண்டல நாட்டின் பொரு ளாதாரம் உயிரை விலைபேசும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இவை பொதுக் குறிப்புக்கள்.

> அடிப்படை உரிமையை அனுபவிக்க முடியாத நிலை,
> சுதந்திரம் புத்தி சுவாதீனம் இழந்து தவிக்கின்றது
> உரிமைகள் முடமாக்கப்பட்டு வீழ்ந்து கிடக்கின்றன,

எமது குறிப்புக்கள், மனிதனின் உடல்நிலை நாடித்துடிப்பில் துல்லியமாகின்றது. நாட்டின் பொருளாதாரம் தனிநபரின் வருமா னத்தில் தெளிவாகின்றது, பலருக்கு வேலை இல்லை—இவ் வறுமையில் தனிநபர் வருமானம் பற்றிப் பேசமுடியுமா?

கப்பல் இல்லை என்றவுடன் கடைப் பொருளைக் கணப் பொழு திற் காணோம். விலையேற்றத்தின் பின் அவை புதிதாய்ப் பிறக்கும் புதைகுழியிலிருந்து. பத்து ரூபா பொருள் பத்து நிமிடத்தில் பத்து × பத்து ஆகும். பதுக்கலின் நுட்பம் பலரது கைவண்ணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் விடுதலையின் பெயரில் மூல வளங்கள் அழிக்கப்படும் வேளை, அரியாசனத்தில் அமர்ந்து கேளிக்கையில் குதூகலிப்பவர்களும் இல்லாமலில்லை.

## திருச்சபையின் பதில்கள்:

"உன் உடைமையிலிருந்து தானம் செய். எந்த ஏழையைக் கண்டாலும் புறக்கணியாதே அவனுக்கு வழிகாட்டு" (தோபி 4:7).

"பொருளாதார வளர்ச்சி மனிதனுடைய கட்டுப்பாட்டுக்கு உட்பட்டே இருக்க வேண்டும். அதனைச் சிறுபான்மையான மனிதர்களின் சொந்த முடிவுக்கோ, மிதமிஞ்சிய பொருளாதார ஆற்றல் கொண்டுள்ள குழுக்களின் விருப்பு வெறுப்புச் சார்ந்த தீர்வுக்கோ சாராது... மக்கள் தாமாக விரும்பி ஏற்படுத்தும் குழுக்களுடையவும் சுயமுயற்சிகளைப், பொது ஆட்சியாளர்களின் செயற்பாடுகளோடு ... இணக்கமுடன் ஒரு முகப்படுத்தல் வேண்டும்." (இ. உ, இ. 65).

## சமுதாயம்:

"ஒருவருடன் ஒருவர் கலந்து, இணைந்து எல்லோர்க்கும் பொதுவான சில நோக்கங்களை அடைவதற்காகக் கூடிச் செயற்படும் பலரைக் கொண்ட தொகுப்புச் சமூகமெனப்படும்". (கிட்டிங்ஸ்).

சமுதாயம் மனிதனை வளர்க்க உதவலாம், அல்லது நெறிதவறி வாழ்விழக்க வழிகோலலாம். நிகழ்வது ஆக்கமில்லை அழிவே. நாட்டின் நிலை தனிமனிதனைச் சமூகத்தின் கைப்பொம்மை ஆக்கியுள்ளது.

சமுதாயம் அதிகாரத்தைப் போர்வையாக்கி, பணத்தில் படுத்துறங்கி, சினிமா என்னும் சேற்றில் தலை முழுகி, மதுவாலும் ஆசாபாசத்தாலும் மேனியைக் கழுவி, பரிசுத்தம் என்னும் பசுந்தோலை அணிந்து, உயிரற்ற உடலாகக் காட்சி அளிக்கின்றது.

> "குடிமக்கள் தங்களது சமூகத்தின் உண்மையான வளர்ச்சியில் தம்மால் இயன்ற அளவு உதவுவது தம் உரிமையும் கடமையும் ஆகும் என்பதை நினைவிற் கொள்ளல் வேண்டும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருச்சிதைவு விஞ்ஞான வளர்ச்சியின் சின்னமாகி விட்டது. ஆணும் பெண்ணும் அவனியில் அலைமோதுகின்றனர். ''ஆண்டவர்'' அவர்களது அகராதியில் இல்லை. காண்பது மட்டும் நிஜம், காணாதது மாயை.

சிறகொடிந்த பறவைகளாகச் சிலர் சிறையில். அடையாளம் தெரியாத மனித முகங்கள் பல புதைகுழிக்குள். சாதிக் கொடுமையாற் சரித்திரமே மாறிய வாழ்க்கை. விரக்தியின் விளிம்பிற் பலரது வாழ்வு நடனமாடுகின்றது.

சிறுவர்கள் துஷ்பிரயோகம் கைவந்தகலை. காலத்தின் சாயல்கள் அவர்கள் முகங்களில், விடைகாணாத வினாக்கள்; பிஞ்சு மனங்களில் அரவணைக்க அன்புக்கரம் இல்லை. அன்னைக்கும் வேலை, தந்தைக்கும் வேலை. இவை சமுதாயத்தில் மாறாத தழும்பை விட்டுச் செல்லும் என்பது விடுகதையல்ல. இவர்களின் மனக்குமுறல்கள் பாலைவனப் பூகம்பங்கள்.

## திருச்சபையின் பதில்:

''குடிமக்கள் தங்களது சமூகத்தின் உண்மையான வளர்ச்சியில் தம்மால் இயன்ற அளவு உதவுவது தம் உரிமையும் கடமையும் ஆகும், என்பதை நினைவிற் கொள்ளல் வேண்டும்.'' (இ. உ. தி 65)

''மனிதன் சமூகமாக வாழ்வதானால் கூட்டங்கள் கூடவும், குழுக்கள் அமைக்கவும், உறவுகளை வளர்த்துக் கொள்ளவும், உரிமை உடையவன், இத்தகைய உரிமை தனிமனித சுதந்திரத்திற்கும், பொறுப்புக்கும் இடையூறாகாது'' (பாப் 23ம் அருளப்பர், அன்னையும் ஆசிரியையும்).

காலத்தின நீரோட்டத்தில் கிறிஸ்தவர்கள் பலர் கரைந்துவிட்டனர். துரும்பையாயினும் பிடித்துக் காலூன்றும் வேளை காத தூரமன்று. காலத்தின் கோலத்தில் அன்று முழங்கிய குரலொலி, இன்று எதிர் நீச்சல் போடும் வண்ணம் எதிரொலிக்கின்றது. ''நான் என்ன செய்ய வேண்டும்''.

## மருந்தை உட்கொள்ளும் முறை

இன்றைய யதார்த்த நிலையும், திருச்சபையின் பதிலும், முற்றிலும் முரண்பட்டவையாகவுள்ளன. திருச்சபையின் பதில்கள் மந்திர வார்த்தைகள் அல்ல, காற்றில் கலந்துவந்த வெறும் ஞானமன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடித்தளமில்லாத அனுகூலங்கள் அல்ல மனிதனாக வாழ்ந்த தேவனின் வாழ்க்கைக் குறிப்புக்கள். உயிருள்ள வார்த்தைகள் வாழ்க்கையையே உயர்ந்த பலியாக ஒப்புக்கொடுத்த தேவ மனிதனின் எச்சங்கள்.

"கடவுள் வடிவில் விளங்கிய அவர், கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக்கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை. ஆனால், தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதனுக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றி... சாவை ஏற்கும் அளவுக்கு அதுவும் சிலுவைச்சாவையே... தம்மையே தாழ்த்திக்கொண்டார்" (பிலி. 2: 6–8)

> திருச்சபையின் பதில்கள் மந்திரவார்த்தைகள் அல்ல. காற்றில் கலந்துவந்த வெறும் ஞானமன்று. அடித்தளமில்லாத அனுகூலங்கள் அல்ல மனிதனாக வாழ்ந்த தேவனின் வாழ்க்கைக் குறிப்புக்கள் உயிருள்ள வார்த்தைகள் வாழ்க்கையையே உயர்ந்த பலியாக ஒப்புக் கொடுத்த தேவ மனிதனின் எச்சங்கள்.

வாழ்வும் வழிபாடும் வேறுபட்டுப் பாலைவனமாகிய இஸ்ராயேல் மக்கள் மத்தியில் கடவுளாகிய கிறிஸ்து மனிதனானார். அவர்களது புற்றுநோயைத் தாமே சுமந்தார். அதற்குரிய மருந்தை எடுத்துக்கூறி, அதை உட்கொண்டு சாவை வென்று, சத்தியனாகினார்.

"எந்தச் சமயத்தைச் சேர்ந்த மக்களானாலும் சரி, அவர்கள் தத்தம் சமயத்தின் வெளிச்சடங்குகளில் மட்டும் அக்கறையாக இருக்கின்றார்கள், சமயத்தின் அடிப்படை உண்மைகளைப் புறக்கணிக்கின்றார்கள்." இது அன்னைல் காந்தியின் கூற்று.

## நிறைவாக

யேசுவிற்குரிய இடம் சொர்க்கம். யுத்த சூனிய பிரதேசம். பிணவுகள் அற்ற அரசு. பொருளாதாரச் சிக்கல் அற்ற உலகம். பிரிவு இல்லாத அன்புச் சமூகம் அவற்றை விடுத்து அநீதி, அக்கிரமம், ஆதிக்கம் நிறைந்த உலகில் பிறந்து – வாழ்க்கையே வழிபாடாக இறைத்தந்தைக்கு அர்ப்பணித்தார்.

அன்று பாலைவனப் பயணத்தில் ஸ்நாபக அருளப்பர் எதிரொலித்தார். யேசுவே அவரது மையம். இன்று, யேசுவின் வாழ்வை திருச்சபையின் பதில்கள் அரசியல், பொருளாதார, சமூக பாலைவனத்தில் எதிரொலிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த இறைமனிதனை மீண்டும் ஆலயத்தினுட் பூட்டிவைத்து அழகு பார்க்கின்றோம், வாழ்வு வேறு வழிபாடுவேறு என்பது வாழ்விலக்கணமாகி விட்டது.

கடவுளை யுத்த பிரதேசத்திற் பாதுகாப்பு கவசமாக மட்டும் உபயோகிக்க முனைகின்றோம். யுத்தத்தில் அழிவுறும் மனிதத்தைப் பாதுகாக்க மனம் வரவில்லை. வாழ்க்கையை நாம் விரும்பிய வண்ணம் வாழ்கின்றோம்.

இதைவிடுத்து, யுத்தத்தில் சமாதானத்தின் கருவியாக எப்படி வாழ முடியும் என்று எண்ணுவோம். சிக்கல் நிறைந்த அரசியல் பொருளாதார சமூகத்தில் எப்படிக் கிறிஸ்துவைப் பிரதிபலிக்க முடியும் என்று சிந்திப்போம். அத்தனைக்கும் விடை யேசுவின் வாழ்வில் வெளிச்சமாயுள்ளது.

> இதைவிடுத்து, யுத்தத்தின் சமாதானத்தின் கருவியாக எப்படி வாழமுடியும் என்று எண்ணுவோம், சிக்கல் நிறைந்த அரசியல் பொருளாதார சமூகத்தில் எப்படிக் கிறிஸ்துவைப் பிரதிபலிக்க முடியும் என்று சிந்திப்போம் அத்தனைக்கும் விடை யேசுவின் வாழ்வில் வெளிச்சமாயுள்ளது.

ஆகவே அந்தக் கிறிஸ்துவின் மனிதத்துவத்தை இடைக்கச்சையாக அணிந்து கொள்வோம். அந்த மனிதனின் அன்பை அரசியல், பொருளாதார நிறுவனங்களில், வாழ்வின் ஆயுதமாக உபயோகிப்போம். அவரின் உயிர்த்தியாகத்தை எதிரொலிக்கும் திருச்சபையின் பதில்களை வாழ்வின் குறிக்கோளாக்குவோம்.

## உசாத்துணை நூல்


1) இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு

2) கல்வியின் தத்துவ சமூக அடிப்படைகள் – ச. சந்தானம்

3) காந்தி அண்ணல் — மு. வரதராசன்

4) சமூக வளர்ச்சியின் நோக்கில். – யாழ். மறைமாவட்ட மனித முன்னேற்ற நடுநிலைய வெளியீடு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *SYNOPSIS*

# The Resurrection of Jesus is the Resurrection of our hearts

**Mr. T. Ranganayagam**

The belief that the dead will be called to life is being emphasized throughout the scriptures both in the Old Testament and in the New Testament. This belief which is actualized through the miraculous deeds oft he prophets and then that of Jesus finds its zenith in the foretelling of the resurrection of Jesus himself. The resurrection of Jesus Christ gave the apostles the internal force to be the agents of the Gospel till the end of the world. Thus the resurreetion of Jesus Christ becomes the centrality of Christianity. It is the same resurrection which made the early Christian community to call Jesus Christ the 'Lord' the title which was attributed to Yhaweh alone by the Jews. Did Jesus really rise from the dead? Though the Jewish authorities who opposed Jesus in his life time had a strong 'no' to this question, the heroic witnessing life of the apostles and the believers proved the other way. The all four gospels have been written in the light of Jesus' resurrection. If Jesus' resurrection is to be realized in our lives, his teaching should have sense in our lives and his way of life and his experiences should become our own whereby we may build up a new society and become heirs to the Kingdom of God.

# Hope for Evangelization in the New Era

**Bro. S. R. Ranjitharaj**

Pope John Paul II, in his addresses calls the Member of the Church to spread Christianity all over the world. But history shows that the task of evangelization is not an easy endeavour. In each era it encountered many obstacles



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

such as persecution, heratical teachings, schisms, atheistic tendencies, etc. Yet it has made its break through and reached almost the whole of Europe. Africa and certain part of Asia.

Even today the work of evangelization goes once slower face. Persecution is still a reality in our midst; violence in all spheres of life disregards the dignity of man; abortion, artificial family planning, test tube babies, etc. have become a fashion in our time. Though these realities are contrary to the teachings of the Church, yet there are strong rays of hope. The apparitions of Jesus and Mary clearly show the authenticity of the divine and call for repentance and evengelization. Therefore, we can be sure that the spread of Christianity will in no way be blocked by these counter realities. It will have its firm impact on the world.

## Healthy Journeys of Liberation Can Continue Only With Faith In God

**Mr. S. F. Sawundran**

There are several journeys in human life. These journeys give us various experiences. One permanent experience is 'that God accompanies us on these journeys. When our first parents refused to walk with God sin entered the world. Inspite of evil in the world Noah continued to walk with God and was saved from the deluge. Likewise Abraham, Isaac, and Jocob journeyed with God and were protected from evil. The Jews under the leadership of Moses followed God and were liberated from their slavery. Mary too, belived in God's word and gave birth to Jesus the liberator who came to bring good news to the poor, liberation to captives sight to the blind and freedom to the oppressed.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

In today's world in place of the liberation which Jesus brought we see only wars and distruction. In order to restore peace man must follow the established ways of God. What man urgently needs today is the love of Jesus and his values. We must all make a concerted effort to respect each other and get rid of all obstacles against peace by journeying with Jesus.

# The Resurrection of Jesus and the Chistians

**Bro. C. Justin**

Life is a gift of God. Everyone should respect it. Life and death are natural realities of human kind. But for Christians death is nothing but it is a way to a new life, because he has hope on resurrection. The sign of resurrection faith, which is based on hope is Christian's joy. This joy is entirely based on the future. Since the future is presented only in the paradoxical form of the Cross. Christian joy is intimately connected with suffering. The cross of Christ should be the life of the Christians. To be sure: in baptism we are buried with Christ and rise together with him and this intimation ends into earthly life. But this is not all The whole period of christian life is to be moulded into confermity with Christ's death and resurrection. We should walk on the path of light and avoid the path of darkness, by which we could prepare ourselves to participate in the heavenly kingdom.

# The Voice of Today's Wilderness

**Bro. T. R. Vasanthascelan.**

The Social teachings of the Church which have been laid down in various documents demand our special attention to their implications in the present Society. The Social teachings of



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

the church are the reflection upon the words and deeds of Jesus Christ who lived the perfect human life. The message of St. John the Baptist in LK 3:4-14 can be said to be a prelude to these teachings of the Church. Though each and every discrimination and defect in today's modern political. economical and Social system can be corrected by the Social teachings of the church. yet why is there a recurrent failure in creating a new world? Why do the hearts of the people remain so adamant? We are not only aware but also experience the distructive consequences of our political, economical and Social situation both in our material and spiritual life.

We can create a new world only by identifying the liturgy we celebrate with our day today life. We have to live the liturgy. The teaching of St. John the Baptist echoed Jesus Christ, who is in turn echoed in the Social teachings of the Church. The life of Jesus which is presented to us in the iturgy can be the only standard of our life.

---

## வாசகர் கோலங்கள்

இறையியல் கோலங்கள் சஞ்சிகை பல விதமான இறையியல் கருத்துக்களை தாங்கி தமிழ் திருச்சபைக்கு அறிவொளியை கொடுப்பதுடன் சிந்தனையையும் தூண்டி வெளிவருகின்றது. காலத்தின் தேவைக்கு அமைய. திருச்சபையின் போதனைகளை தற்கால சிந்தனைகளை சஞ்சிகையின் நோக்கம் மாறாது வழங்கிவருவது பாராட்டத்தக்கதாக இருக்கின்றது. இதன் வளர்ச்சிக்கு என் வாழ்த்துக்கள்.

வடிவம் 12 வண்ணம் 4 இதழ் கிடைக்கப்பெற்றேன். இதில் வெளியாகியிருந்த "3ஆம் மில்லேனியத்தில் இலங்கைத் திருச்சபையின் வாழ்வும் பணியும்" கலந்தாய் வரங்கு ஒரு வரவேற்புக்குரிய முயற்சியாகும். இதில் பங்கு கொண்டவர்களை பல்வேறு நிலைகளிலும், துறைகளிலும் இருந்து தேர்வு செய்த தன்மையும் பாராட்டுக்குரியது. பலவித கருத்துப் பகிர்வின் பின் இத் தலைப்பு தெரிவு செய்யப்பட்டுள்ளது. ஆய்வின் போது பல கோணங்களிலும் இருந்து நடைமுறைப் பிரச்சனைகள் திருச்சபையின் வளர்ச்சிக்கு, பணியின் தன்மைக்கு ஏற்ப ஆராயப்பட்டுள்ளது. பங்கு கொண்டோருக்கு என் பாராட்டுக்கள்.

**அருட்திரு. நீ. பாக்கியறஞ்சிற்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாசகர்களே!

கிறிஸ்து இயேசுவின்
உயிர்ப்பு நாம் விரும்பும் அமைதியை
எம் உள்ளங்களிலும்
நாட்டிலும் பிறப்பிக்க ஆசிப்பதோடு
யூபிலி ஈஸ்ரர் நல் வாழ்த்துக்களை
தெரிவித்துக் கொள்கிறோம்

ஆசிரியர் குழு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையியல் கோலங்கள்

ஆண்டு சந்தா ( அஞ்சல் செலவு உட்பட ) ரூபா 80=/

தனிப்பிரதி ரூபா 25/=

தொடர்பு கொள்க:
''இறையியல் கோலங்கள்''

புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்,
இலங்கை

தொலைபேசி 021-2482

# Irai - Iyal Kolangal

A Tamil Theological Quarterly
Annual subscription (incl. Postage within Sri Lanka): Rs. 80/—

Single Copy - Rs. 25/-

Subscription and correspondence to:

## Irai - Iyal Kolangal

St. Francis Xavier's Seminary,
Columbuthurai,
Jaffna,
Sri Lanka.
Tel. No. 021 — 2482



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org